பாடலைத் தொடர்ந்தே சென்றேன்...31.

இன்று நமது பயணம் சத்யலோகத்தை நோக்கி......கலைவாணிக்காக கலைவாணியே பாடும் கவின்மிகு கானம்.அருட்செல்வர் ஏ.பி.நாகராஜன் அவர்களின் பிரும்மாண்டமான தயாரிப்பில்,திரை இசைத்திலகம் கே.வி.மகாதேவன் அவர்கள் இசையமைப்பில் அருமையான பீம்ப்ளாஸ் ராகத்தில் அமைந்த "கோ மாதா எங்கள் குலமாதா"

புராணப்படம் என்பதெல்லாம் இப்போது நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில் இந்தப் பாடல் காட்சியிலாவது கற்பனைக்கு எட்டாத அந்த தேவலோகம் எப்படி இருந்தது என்று செட் போட்டு காட்டியிருக்கும ் நேர்த்தி.....அருமை..அருமை.கலைவாணி கையில் வீணையேந்தி காமதேனுவாகிய பசுமாட்டைத் துதித்துப் பாடும் பாடலாக அமைக்கப் பட்டிருக்கும்.காட்சி ஜோடனைகளை நீங்கள் கண்டு களிக்கப் பகிர்ந்துள்ளேன்.சுசீலாம்மாவின் குரலினிமையையும்,சங்கதிகளின் பிரவாகங்களையும்,வீணையிசையையும் சுற்றி சுற்றியே பாடல்.

குலமாதர் நலம் காக்கும் குணமாதா....புவிவாழ்வில் அருள் பொங்கும் திருமாதா....வண்ணகோமாதா..மாதாவில் ஒரு இரக்கம்,கருணை சுரக்கும்....பழகும் உறவிலே பிள்ளை நீயே.....பிள்ளை நீயேவில் ஒரு பொடி சங்கதி....ஆஹா...

கல்லார்க்கும் கற்றவர்க்கும் தெய்வம் நீயே....தெய்வம் நீயே....இங்கே ஒரு சங்கதி....ஓஹோ....

இணங்காதோர் மனம் கூட இணங்கும்....நீ எதிர் வந்தால் எதிர்காலம் துலங்கும்...வணங்காதோர்.....இங்கே படத்தில் கவனித்தீர்களானால் சரஸ்வதியே சுசீலாம்மாவின் அந்த சங்கதிக்கு வீணையிலிருந்து கையை ஒரு நொடி எடுத்துவிட்டு ரசிப்பதாக படமாக்கி இருப்பார்....ஞானஸ்தர் ஏ.பி.ந்...

.உன்னை வலம் வந்தால் நலமெல்லாம் விளங்கும்....வண்ண கோமாதா.....ஆ ஆ...ஒரு உருட்டு அகார

சங்கதி.....அபாரம்....சாதாரண மானுடர்கள் உருண்டு புரண்டாலும் வராத சங்கதி.....சாக்ஷாத் கலைவாணி,இசையரசி சுசீலாம்மாவைத்தவிர வேறு யாராலும் பாடமுடியாத அனாயாசமான சங்கதி........இந்த ஒரு இடத்திற்காகவே பாடல் பூரா மறுபடியும் மறுபடியும் பயணிக்க வைக்கும் இந்தப் பாடல்... இதோ உங்களுடன்....

## Komatha engal kulamatha full HD

YOUTUBE.COM

UnlikeUnlike · · Share · 242

- You, Rajeswari Narayanan, Boston Ganesh and 21 others like this.

  - **Susi Priya** Super mam.. Ovoru varigalayum nalla unarnthu ezhuthirukirergal.. Neengal kuruvathu unmai than mam..susila ammavin sangathiku inaiyaga veru yaralum pada mudiyathu...
    October 2 at 7:39am · Like

  - **Ramamurthy Subbayan** தேன்...........தேன்...........தேன்...........!!
    October 2 at 11:09am · Like · 2